T.C. 019

**001/DD/25**

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## SECOND CLASS LANGUAGE TEST — PART – A
## WRITTEN EXAMINATION (TRANSLATION, COMPOSITION, LETTER WRITING AND LANGUAGE SKILLS)

(Without Books)

Maximum Time : 2.30 hours Maximum Marks : 100

குறிப்பு :

1. **அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

2. **வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.**

3. **கையெழுத்து தெளிவாகவும், விடைகள் குறித்த அளவினதாகவும் இருத்தல் வேண்டும்.**

பகுதி — I

1. ஆங்கிலப் பத்தியைத் தமிழாக்கம் செய்தல். (1 × 10 = 10)

This is the age of Computers. Computers are becoming more and more a part of everyday life. Today in the running of business, firm, industrials concerns and government departments. Lot of information processing is required. The computer is the super fast information processing unit.

கீழ்க்காணும் தலைப்புகள் ஒவ்வொன்றிற்கும் 150 சொற்களுக்கு மிகாமல் கட்டுரை எழுதுக. (2 × 15 = 30)

2. தமிழின் பெருமை — சிறப்புகள்.

3. சுற்றுச்சூழல் பாதுகாப்பு.

4. ஆண்டு ஊதிய உயர்வு வேண்டி விண்ணப்பம். (1 × 10 = 10)

**[Turn over**

## பகுதி — II

5. கொடுக்கப்பட்டுள்ள உரைநடைப் பத்தியைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி. (5 × 1 = 5)

பாவேந்தர் பாரதிதாசன்.

இயற்பெயர் சுப்புரத்தினம் இவர் 1891ல் ஏப்ரல் 29ல் புதுவையில் பிறந்தார். தந்தை கனகசபை, தாய் இலக்குமி. பாரதியின் மேல் கொண்ட பற்றால் தம் பெயரை பாரதிதாசன் என மாற்றிக் கொண்டார். இவர் பாவேந்தர், புரட்சிக் கவிஞர் ஆகிய சிறப்புப் பெயர்களால் அழைக்கப்படுகிறார். குடும்பவிளக்கு, இருண்ட வீடு, தமிழியக்கம், பாண்டியன் பரிசு, அழகின் சிரிப்பு முதலியன இவர் தம் படைப்புகளாகும். திருச்சிராப்பள்ளியில் பாரதிதாசன் பெயரில் பல்கலைக்கழகம் சிறப்பு சேர்ந்துள்ளது.

வினாக்கள் :

(அ) பாரதிதாசனின் இயற்பெயர் என்ன?

(ஆ) பாரதிதாசன் எங்கே எப்போது பிறந்தார்?

(இ) பாரதிதாசனின் பெற்றோர் யாவர்?

(ஈ) பாரதிதாசனின் படைப்புகள் நான்கினை எழுதுக.

(உ) பாரதிதாசன் பல்கலைக்கழகம் எங்குள்ளது?

6. கொடுக்கப்பட்டுள்ள சூழ்நிலைக்கு ஏற்ப உரையாடலை நிறைவு செய்க. (5 × 1 = 5)

Tr. வணக்கம் மாணவர்களே,

Stu. ____________________

Tr. இன்று பாரதியார் பற்றி அறிவோமா?

Stu. ____________________

Tr. பாரதியாரின் சொந்த ஊர் எது?

Stu. ____________________

Tr. ____________________

Stu. தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ளது.

Tr. பெற்றோர் பெயர் யாருக்கு தெரியும்.

Stu. எனக்கு தெரியும். ____________________

## பகுதி — III

### மொழிப்பயிற்சி

பின்வரும் வினாக்களுக்கு விடையளி : (40 × 1 = 40)

7. தமிழில் நெடில் எழுத்துகள் எத்தனை?

8. 69 — தமிழ் எண்ணுருவாக மாற்றுக.

9. வாக்கியத்தில் அமைத்து எழுதுக.
"பசுமரத்தாணி போல"

10. ஐப்பசிக்கு முந்தைய மாதம் எது?

11. புதன்கிழமைக்கு அடுத்த நாள் என்ன கிழமை?

12. விடுபட்ட எழுத்துகளை எழுதுக.
கி _____ கு, _____, _____, கே, கை _____, கோ

13. அகர வரிசைப்படுத்தி எழுதுக.
கிளி, கேள், குருவி, கல், கோள்.

14. துகிர் — பொருள் தருக.

15. ஒருமை பன்மைப் பிழை நீக்கி எழுதுக.
பெண்கள் எல்லாத்துறையிலும் பணிபுரிகின்றாள்.

16. M.Sc. Science – தமிழில் எழுதுக.

17. சிலப்பதிகாரத்தை இயற்றியவர் யார்?

18. முக்கனி — விரித்து எழுதுக.

19. விடைக்கேற்ற வினா அமைக்க.

பலகோடி மக்களின் பட்டினியைப் போக்கும் வாழ்வாதாரம் கதர் என்று காந்தியடிகள் கருதினார்?

20. சந்திப்பிழை நீக்கி எழுதுக.

மேடை பேச்சு மிகுந்த பயனை தரவல்லது.

21. இரு பொருள் தருக.

நகை

22. பிறமொழிச் சொல்லுக்கு தமிழ் சொல் எழுதுக.

நான் இந்தக் காலேஜின் ஓல்டு ஸ்டுடண்ட்.

23. பிழையைத் திருத்தி எழுதுக.

ஆந்தை கத்தும், புலி சீறும்

24. சென்று வந்தான் முருகன் — இதில் பெயர்ச்சொல் எது?

25. முதல் எழுத்தை மாற்றி புதிய சொல் ஒன்றை எழுதுக.

பாடினான்

26. இந்தியாவின் தேசியப் பறவை எது?

27. இளமைப் பெயர்களை எழுதுக.

சிங்கம் ______________, மான் ______________

28. பேச்சு வழக்கு சொல்லை எழுத்து வழக்கு சொல்லாக மாற்றுக.

வானம்

29. பிறமொழிச் சொல்லுக்கு தமிழ்ச்சொல் எழுதுக.

சுரேஷ் வாட் ஹேப்பண்ட்? ஏன் லேட்?

30. உரிய நிறுத்தற் குறியிடுக.

புகை — உங்களுக்கு பகை பேஷ் இதை நீயே படிச்சுக் காட்டு என்றான் கமலநாதன்.

பொருத்துக.

31. 35 – சாஎ

32. 48 – சஅக

33. 67 – நடு

34. 91 – சஅ

35. எதிர்காலச் சொல்லை எழுதுக.

எழுதுகிறேன் ______________.

36. பால் வகையை அறிந்து எடுத்து எழுதுக.

ஐவர் போருக்குச் சென்றனர்.

37. தீ, தீ, தீ எவ்வகைத் தொடர்?

அடுக்குத் தொடர், இரட்டைக் கிளவி

38. தமிழாக்கம் செய்க.

Camera

39. சரியான சொல்லைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

இறுவரை காணின் ______________ (கிளக்காம், கிழக்காம்) தலை.

40. மனவலிமையுடையோர் என்னும் பொருள் தரும் சொல் ______________.

(உரவோர், உறவோர்)

41. மதம் — இடை எழுத்தை மாற்றி புதிய சொல்லை உருவாக்குக.

42. S.S.L.C. — தமிழில் விரித்து எழுதுக.

43. பொருந்தாத சொல்லை எடுத்து எழுதுக.

பேனா, பென்சில், அட்லஸ், எழுதுகோல்.

44. வினைச் சொல்லை எடுத்து எழுதுக.

முத்து அழகாக எழுதினான்.

45. பொருத்தமான சொல்லை எழுதுக.

ஈஸ்வரி ____________ (ஆடினான், ஆடினாள்)

46. கலை, காலை — என்பதன் பொருள் எழுதுக.